

Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

வர்தந்தி
சிறப்பு இதழ்

ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் ஸ்ரீசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ விதுசேகரபாரதீ மஹாஸ்வாமிகளின் 33ஆவது வர்தந்தி மஹோற்ஸவம்

|| श्रीदक्षिणामूर्तिस्तोत्रम् ||

|| ஸ்ரீ த³க்ஷிணாமூர்தி ஸ்தோத்ரம் ||

ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்யார் அருளியது.

ஸத் ஸம்பிரதாயம் இதழின் தொடர்ச்சி

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

आलेपवन्तं मदनाङ्गभूत्या शार्दूलकृत्त्या परिधानवन्तम् |
आलोकये कञ्चन देशिकेन्द्रमज्ञानवाराकरबाडवाग्निम् ||१०||

ஆலேபவந்தம்’ மத3னாங்க3 பூ4த்யா ஶார்தூ3லக்ரு’ச்யா பரிதா4னவந்தம் |
ஆலோகயே கஞ்சன தே3ஶிகேந்த்3ரம் அஜ்ஞான வாராகர பா3ட3வாக்3னிம் ||10||

मदनाङ्गभूत्या {மத3னாங்க3பூ4த்த்யா} = மன்மதனுடைய உடலின் திருநீற்றால்; आलोपवन्तम् {ஆலோபவந்தம்} = பூச்சுக்களை உடையவரும்; शार्दूलकृत्त्या {ஶார்தூ3லக்ரு’த்த்யா} = புலித்தோலால்; परिधानवन्तं {பரிதா4னவந்தம்’} = ஆடையணிந்தவரும்; अज्ञानवाराकरबाडवाग्निं {அஜ்ஞானவாராகரபா3ட3வாக்3னிம்’} = அஞ்ஞானமென்னும் கடலினுள் காணும் படபாக்னி; कञ्चन {கஞ்சன} = ஓர்; देशिकेन्द्रम् {தே3ஶிகேந்த்3ரம்} = ஆசிரியப் பெருமானை; आलोकये {ஆலோகயே} = காண்கின்றேன்.

இங்கு பகவத்பாதர் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியின் ஸாக்ஷாத்காரத்தை விளக்குகிறார். முன் சுலோகத்தில் தக்ஷிணாமூர்த்தி என் கண் முன் தோன்ற வேண்டுமென்று வேண்ட உடனே அவர் பகவத்பாதரின் கண் முன் காட்சி அளிக்கின்றார். அவரது திருமேனியின் திருக்கோலம் இங்கு காட்டப்படுகின்றது. முன் ஒரு சமயம் சிவபெருமான் இமயமலைச் சாரலில் தவம் செய்யும்பொழுது காமன் அவரது தவத்தைக் கலைக்கத் தனது மலர்க் கணையை எய்தான். அதனால் சினமுற்ற சிவபெருமான் தன் நெற்றிக் கண்ணில் கிளம்பிய தீயால் காமனின் உடலை எரித்துச் சாம்பலாக்கினார். அச்சாம்பலையே தம் உடல் முழுவதும் பூசிக் கொண்டார். அச்சிவபெருமானே தக்ஷிணாமூர்த்தியாய்த் தோற்றம் தருதலால் அவர் தனது மேனியை அந்தச்

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

சாம்பல் பூச்சினால் அலங்கரித்துக் கொண்டிருக்கிறார் என்று கூறுகிறார். இதனால் அவர் தனது பக்தர்களின் உள்ளத்தெழும் காமக்கனலைக்களைந்து அவர்களைத் தூய்மை வாய்ந்தவர்களாகச் செய்ய வல்லவர் என்பது நன்கு விளங்குகின்றது. மேலும் அவர் தம் உடலைப் புலித் தோலால் அலங்கரித்துக் கொண்டிருக்கின்றார். புலி இயற்கையிலேயே எப்பொழுதும் கோபம் குடி கொண்டுள்ளது. அதன் தோலை உரித்து ஆடையாகக் கட்டிக் கொண்டுள்ளார் என்று கூறுவது கோபத்தை அடக்கியிருப்பதைக் காட்டுகிறது. ஆகவே தக்ஷிணாமூர்த்தியின் அருள் பெற்றவர்களுக்கு காமம், க்ரோதம் இரண்டும் விலகிவிடும், உலகில் எல்லாத் துன்பங்களுக்கும் இவ்விரண்டும் மூலக்காரணம்.

ஆனால் அஞ்ஞானம் என்ற இருள் அகத்தில் இருக்கும் வரை எப்பொழுதாவது காம க்ரோதங்கள் தலையைக் காட்டலாம். அதற்காக என்று அப்பெருமானை இங்கு வர்ணிக்கின்றார். அஞ்ஞானமென்பது ஓர் பெருங்கடல். அதற்கு எல்லை கிடையாது. ஆழம் கண்டுபிடிப்பதும் அரிது. ஆனால் அதற்குள் தோன்றும் பாட வாக்னி அக்கடலையே எரித்து அழித்து விடுகின்றது. இவ்வாறு அஞ்ஞானம் நீங்கியவுடன் தானாகவே ஸ்வயஞ் ஜோதி மயமான பெருமான் அகக்கண்முன் தோன்றுகின்றார். அதனால் மோக்ஷ சாம்ராஜ்யம் கிட்டுகின்றது. இதற்குச் சிறந்த வழிகாட்டியாகத் தோன்றுபவர் ஸாக்ஷாத் தக்ஷிணாமூர்த்தியே, அவரை யான் இங்கு காண்கின்றேன்.

चारुस्मितं सोमकलावतंसं वीणाधरं व्यक्तजटाकलापम् |
उपासते केचन योगिनस्त्वामुपात्तनादानुभवप्रमोदम् ||११||
சாருஸ்மிதம்’ ஸோமகலாவதம்’ஸம்’ வீணாத⁴ரம்’ வ்யக்தஜடாகலாபம் |
உபாஸதே கேசன யோகி³னஸ்த்வா முபாத்த நாதா³னுப⁴வப்ரமோ த³ம் ||11||

चारुस्मितं {சாருஸ்மிதம்’} = அழகிய புன்முறுவலையுடையவரும்; सोमकलावतंसं {ஸோமகலாவதம்’ஸம்’} = சந்திர கலையை ஆபரணமாகக்கொண்டவரும்; वीणाधरं {வீணாத⁴ரம்’} = வீணையைக் கையிலேந்தியவரும்; व्यक्तजटाकलापं {வ்யக்தஜடாகலாபம்’} = விரிந்த சடைக்கூட்டத்தையுடையவரும்; उपात्तनादानुभवप्रमोदं {உபாத்தநாதா³னுப⁴வப்ரமோத³ம்’} = அடையப்பட்ட இன்னிசை நுகர்ச்சியின் மகிழ்ச்சியை உடையவருமான; त्वां {த்வாம்’} = உம்மை; केचन {கேசன} = சில; योगिन: {யோகி³ன:} = யோகிகள்; उपासते {உபாஸதே} = உபாஸிக்கின்றனர்.

இங்கு வீணா தக்ஷிணாமூர்த்தியின் உபாஸனை கூறப்படுகிறது. அவர் முகத்தில் அகமகிழ்வின் சின்னமாய் புன்முறுவல் பூத்துக் காணப்படுகின்றது. அவரது முடியில் காணப்படும் சந்திரகலை அவரது முகத்தை மிகவும் பொலிவுபெறச் செய்கின்றது. அவர் தனது திருக்கரத்தில் வீணையைத் தாங்கி இன்னிசைகளை எழுப்பிக்கொண்டிருக்கிறார். அவர் ஜடைகளை தரித்துக்கொண்டிருக்கிறார். அவர் விணையின் இனிய நாதத்தை அனுபவித்து ஆனந்தமடைகின்றார். இவ்வாறாக ஆநந்த முர்த்தியான தக்ஷிணா மூர்த்தியை உபாஸிக்கும் யோகிகள் அநாஹத சக்ரத்தில் எழும் இன்னிசையைக்கேட்டு ஆனந்தவெள்ளத்தில் ஆழ்கின்றனர்.

தக்ஷிணாமூர்த்தி, யோகதக்ஷிணாமூர்த்தி, வீணா தக்ஷிணாமூர்த்தி என்று மூன்று ரூபங்கள் உண்டு, தக்ஷிணாமூர்த்தியாக இருந்து வேதாந்த தத்வஞானத்தை உபதேசித்தார். யோகமுறைகளை அனுஷ்டித்துக் காண்பித்த நிலைக்கு யோக தக்ஷிணாமூர்த்தி என்று பெயர். நாரதாதிகளுக்கு வீணை வாசித்துக்காட்டிய நிலைக்கு வீணாதக்ஷிணாமூர்த்தி என்று பெயர். (11)

उपासते यं मुनयः शुकाद्याः निराशिषो निर्ममताधिवासाः |
तं दक्षिणामूर्तितनुं महेशं उपास्महे मोहमहार्तिशान्त्यै ||१२||
உபாஸதே யம்’ முனய: ஶுகாத்³யா: நிராஶிஷோ நிர்மமதாதி⁴வாஸா: |
தம்’ த³க்ஷிணாமூர்திதனும்’ மஹேஶம்’ உபாஸ்மஹே மோஹமஹார்தி
ஶாந்த்யை ||12||

यं {யம்’} = எவரை; शुकाद्या: {ஶுகாத்³யா:} = சுகர் முதலிய; मुनय: {முனய:} = மஜூனிவர்கள்; निराशिष: {நிராஶிஷ:} = பற்றற்றவர்களாயும்; निर्मताधिवासा: {நிர்மதாதி⁴வாஸா:} = கர்வத்திற்கு இடம் கொடாதவர்களாகவும் இருந்துகொண்டு; उपासते {உபாஸதே} = உபாஸிக்கின்றார்களோ; तं {தம்’} = அந்த; दक्षिणामूर्तितनुं {த³க்ஷிணாமூர்திதனும்’} = தக்ஷிணாமூர்த்தியின் உருவந்தாங்கிய; महेशं {மஹேஶம்’} = பரமேஸ்வரனை; मोहमहार्तिशान्त्यै {மோஹமஹார்திஶாந்த்யை} = மோகமென்ற பெரும் துன்பம் நீங்குவதற்காக; उपास्महे {உபாஸ்மஹே} = பஜிக்கின்றோம்.

பரமேஸ்வரனை சுகர் முதலிய மகரிஷிகள் உபாசிக்கின்றனர். அவர்களுக்கு மோஹம் இல்லை. அவர்கள் அனைவரும் ஒரு பொருளிலும் ஆசை இல்லாதவர்கள். அவர்கள் தங்களுடைய உள்ளத்தில் அகங்கார மமகாரங்களுக்கு இடம் கொடாதவர்கள். அவர்கள் பரமேச்வரனை அனவரதமும் உபாஸிப்பதால் பரமாநந்தத்தைப் பெற்று மகிழ்கின்றனர்.

நமக்கோ, மோஹம், ஆசை, அஹங்காரம், இவை இன்னும் நீங்கவில்லை. இவைகளால் ஏற்படும் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். பரமேசனின் அருள் கிடைத்தால் தான் இவை நம்மை விட்டு விலகும். மோஹம் முதலியவை நீங்குவதற்காக தக்ஷிணாமூர்த்தியை உபாஸிப்போம். ஆசை, கர்வம் முதலியவை இல்லாத சுகாதிமுனிவர்களே அவரை உபாஸிக்கும் பொழுது நாம் உபாஸிக்க வேண்டும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? (12)

कान्त्या निन्दितकुन्दकन्दलवपुर्न्यग्रोधमूले वस-न्कारुण्यामृतवारिभिर्मुनिजनं सम्भावयन्वीक्षितैः |
मोहध्वान्तविभेदनं विरचयन्बोधेन तत्तादृशा देवस्तत्वमसीति बोधयतु मां मुद्रावता पाणिना ||१३||
காந்த்யா நிந்தி³த குந்த³ கந்த³ல வபுர் ந்யக்³ரோத⁴மூலே வஸந் காருண்யாம்ரு’தவாரிபி⁴ர்
முநிஜனம்’ ஸம்பா⁴வயன் வீக்ஷிதை: |
மோஹத்⁴வாந்த விபே⁴த³னம்’ விரசயன் போ³தே⁴ன தத்தாத்³ரு’ஶா தே³வஸ்தத்வமஸீதி
போ³த⁴யது மாம்’ முத்³ராவதா பாணினா ||13||

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

कान्त्या {காந்த்யா} = அழகினால்; निन्दित {நிந்தி^{3}த} = பழிக்கப்பட்ட; कुन्दकम्दलवपुः {குந்த^{3}கம்த^{3}லவபு:} = புதியமல்லி அரும்பை உடைய சரீரமுள்ளவரும்; न्यग्रोधमूले {ந்யக்^{3}ரோத^{4}மூலே} = ஆலமரத்தடியில்; वसन् {வஸன்} = வஸித்துக்கொண்டு; कारुण्यामृतवारिमिः {காருண்யாம்ரு'தவாரிமி:} = தயை என்னும் அமுதநீர் நிரம்பிய; वीक्षितैः {வீக்ஷிதை:} = பார்வைகளால்; मुनिजनं {முநிஜனம்'} = முனிவர்களை; सम्भावयन् {ஸம்பா^{4}வயன்} = அருளிக் கொண்டும்; तत्ताद्दशा {தத்தாத்^{3}ரு'ஶா} = அப்படிப்பட்ட; बोधेन {போ^{3}தே^{4}ன} = ஆத்ம ஞானத்தால்; मोहध्वान्तविमेदनं {மோஹத்^{4}வாந்தவிமேத^{3}னம்'} = மோஹமெனும் இருட்டைப் பிளத்தலை; विरचयन् {விரசயன்} = செய்து கொண்டும் இருக்கிற; देवः {தே^{3}வ:} = தக்ஷிணா மூர்த்த; मुद्रावता {முத்^{3}ராவதா} = சின்முத்திரையுடன்கூடிய; पाणिना {பாணினா} = கையால்; मां {மாம்'} = என்னை; तत्वमसि {தத்வமஸி} = நீ பரம்பொருளாய் இருக்கிறாய்; इति {இதி} = என்று; वोधयतु {வோத^{4}யது} = அறிவுபெறச் செய்யட்டும்.

தக்ஷிணாமூர்த்தி மிகுந்த அழகு வாய்ந்தவர். அவரது திருமேனியின் காந்தி வெண்ணிறம் பொருந்திய மல்லிகையை இகழும் தன்மை வாய்ந்தது. அவர் தன்னைச் சாரும் மாமுனிவர்கள் அனைவரையும் பாராட்டிக்கொண்டு

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஆலமரத்தடியில் அமர்ந்திருக்கின்றார். இரக்கத்துடன் கூடிய அவரது பார்வைகள் முனிவர்கள் மீது விழுகின்றன. அவைகள் அமுதத்தின் திவிலைகளையே முனிவர்கள் மீது வாரி வீசுவது போல் காணப்படுகின்றன. அவர் ஆத்மஞான உபதேசத்தால் மோஹமெனும் இருளை நீக்குகின்றார். அவ்வாறு காட்சிதரும் தக்ஷிணாமூர்த்தி சின்முத்திரையுடன் கூடிய தனது திருக்கரத்தால் தத்வமஸி என்ற மஹாவாக்யார்த்தமான ஜீவப்ரஹ்மைக்ய ஞானம் ஏற்படும்படி அருள் செய்யட்டும். (13)

अगौरगात्रैरललाटनेत्रैरशान्तवेषैरभुजङ्गभूषैः |
अबोधमुद्रैरनपास्तनिद्रैरपूर्णकामैरमरैरलं नः ||१४||

அகௌ3ர கா3த்ரை ரலலாடநேத்ரை ரஶாந்தவேஷை ரபு4ஜங்க3 பூ4ஷை: |
அபோ3த4முத்3ரை ரனபாஸ்த நித்3ரை ரபூர்ண காமை ரமரை ரலம்’ ந: ||14||

अगौरगात्रै: {அகௌ3ரகா3த்ரை:} = வெண்மையான சரீரம் இல்லாதவர்களாயும்; अललाटनेवै: {அலலாடனேவை:} = நெற்றிக்கண் அற்றவர்களாயும்; अदान्तवेषै: {அதா3ந்தவேஷை:} = அமைதியைத்தரும் வேஷம் இல்லாதவர்களாயும்; अभुजङ्गभूषै: {அபு4ஜங்க3பூ4ஷை:} = பாம்புகளை அணிகலமாகக்கொள்ளாதவர்களாயும்; अबोधमुद्रै: {அபோ3த4முத்3ரை:} = சின்முத்திரை யில்லாதவர்களாயும்; अनपास्तनिद्रै: {அனபாஸ்தநித்3ரை:} = மோஹம் உள்ளவர்களாயும்; अपूर्णकामै: {அபூர்ணகாமை:} = நிறைவேறாத மனோர தங்களையுடையவர்களுமான; अमरै: {அமரை:} = தேவர்களால்; न: {ந:} = நமக்கு; अलम् {அலம்} = போதும்.

தக்ஷிணாமூர்த்தி அழகிய திருமேனி படைத்தவர். அவரது உடல் களங்கமற்ற சந்திரன்போல் வெண்மையானது. அவரே பரமேச்வரன் ஆதலால் அவர் நெற்றிக் கண் பெற்று விளங்குகிறார். அக்கண்ணிலிருந்து அக்னி ஜ்வாலைகள் கிளம்புவதால் அவர் பகைவர்கள் அனைவரையும் அழிக்கும் ஆற்றலுடையவர். இவ்வாறு இருப்பினும் அவர் மிகவும் சாந்தஸ்வரூபி. ஆன்மஞானமே உருவெடுத்து விளங்குவது போல் காணத்தக்கவர். அவருடைய திருமேனி அரவங்களால் அழகுபடுத்தப்பட்டுள்ளது. அதனால் அவர் பயங்கரமாயும் ரமணீயமாயும் காட்சியளிக்கின்றார். அவரது திருக்கரத்தில் ஜீவனும் பிரம்மமும் ஒன்றே என்று அறிவுறுத்தும் சின்முத்திரை காணப்படுகின்றது. அவர் என்றும் அஞ்ஞானமென்ற தூக்கத்தை விலக்கி ஆத்மபோதம் என்ற ஜாக்ர தவஸ்தையிலேயே இருக்கின்றார். இவ்வாறு நமது அறியாமையெனும் இருளை நீக்கி நமக்கு ஆன்ம ஒளியை அளிக்கும் சின்மயனான தக்ஷிணாமூர்த்தியையே நாம் போற்றுவோமாக. இக்குணங்கள் அற்ற மற்ற தெய்வங்களைப் போற்றுவதால் யாது பயன்? (14)

दैवतानि कति सन्ति चावनौ नैव तानि मनसो मतानि मे |
दीक्षितं जडधियामनुग्रहे दक्षिणाभिमुखमेव दैवतम् ||१५||

தை3வதானி கதி ஸந்தி சாவனௌ நைவ தானி மனஸோ மதானி மே |
தீ3க்ஷிதம்’ ஜட3தி4யாமனுக்3ரஹே த3க்ஷிணாபி4முக2மேவ தை3வதம் ||15||

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

अवनौ **{அவனௌ}** = பூமியில்; कति **{கதி}** = எவ்வளவு; दैवतानि **{தை^{3}வதானி}** = தேவதைகள்; सन्ति **{ஸந்தி}** = இருக்கின்றனர்?; तानि **{தானி}** = அவர்கள்; मे **{மே}** = என்னுடைய; मनस: **{மனஸ:}** = மனதிற்கு; नैव मतानि **{நைவ மதானி}** = உகந்தவர்களாக இல்லவே இல்லை; जडधियां **{ஜட^{3}தி^{4}யாம்'}** = அறிவற்றவர்களுக்கு; अनुग्रहे **{அனுக்^{3}ரஹே}** = அருள் புரிவதில்; दीक्षितं **{தீ^{3}க்ஷிதம்'}** = தீக்ஷைபெற்ற; दक्षिणाभिमुखमेव **{த^{3}க்ஷிணாபி^{4}முக^{2}மேவ}** = தென் திசையை நோக்கியிருப்பவரே; दैवतम् **{தை^{3}வதம்}** = தேவதை.

இப்பூவுலகின்கண் எண்ணற்ற தெய்வங்கள் போற்றப்படுகின்றன. ஆனால் அவர்கள் தக்ஷிணாமூர்த்தியைப்போல் ஆன்மஞானத்தையளித்து ஜீவர்களை அஞ்ஞானமெனும் ஆழ்ந்த நித்திரையிலிருந்து எழுப்பும் சக்திவாய்ந்தவர்கள் அல்ல. ஆகையால் அவர்கள் என் மனதிற்கு உகந்தவர்கள் அல்ல. எனக்கு ஆத்மபோதத்தை அளிக்கவல்ல தக்ஷிணா மூர்த்தியே உகந்த தைவம்.

மேற்கண்டவாறு கூறியிருப்பதைக்கொண்டு பகவத்பாதர் மற்ற தெய்வங்களை இகழ்வதாக நினைக்கக்கூடாது. அவர் ஆறு சமயங்களையும் நிலைநாட்டிய ஆசார்ய புருஷர். தக்ஷிணாமூர்த்தியைப் போலவே மற்ற தேவதைகளையும் கொண்டாடுகின்றவர். அவர் மற்ற எல்லா தேவதைகளையும் போற்றுவதற்காகப் பல துதிகளையும் இயற்றியுள்ளார். நமக்குப் பல தெய்வங்களிடத்தும் பக்தி இருப்பினும் நம் மனம் ஒரே ஒரு தெய்வத்தினிடத்து நிலைத்து நிற்க வேண்டும். இம்மாதிரி ஒரே தெய்வத்தை அனவரதமும் தியானிப்பதற்கு "பராபக்தி" என்று பெயர். இவ்வாறு சிறந்த பக்தியுள்ள மகாபுருஷனுக்கு ஆன்மஞானம் எளிதில் கிட்டும். அவனவன் ருசிப்படி இஷ்டதேவதையினிடம் பரபக்தி ஏற்படுவதற்காக ஒவ்வொரு ஸ்தோத்திரத்திலும் அந்த தேவதையே மிகவும் உயர்ந்தது எனக் கூறுவார். **'नहि निन्दा निन्दितुं प्रवृत्ता अपि तु स्तुत्यं स्तोतुं'** 'நஹி நிந்தா^{3} நிந்தி^{3}தும்' ப்ரவ்ரு'த்தா அபி து ஸ்துத்யம்' ஸ்தோதும்'' என்ற நியாயப்படி நிந்தைபோல் காணப்படும் வாக்யங்களுக்கு தக்ஷிணா மூர்த்தியை ஸ்துதி செய்வதில்தான் தாத்பர்யம். உண்மையில் ஒரே ப்ரஹ்மம் தான் பல உருவம் கொண்ட பல தேவதைகளாகக் காணப்படுகிறது. (15)

मुदिताय मुग्धशशिनावतंसिने भसितावलेपरमणीयमूर्तये |
जगदिन्द्रजालरचनापटीयसे महसे नमोऽस्तु वटमूलवासिने ||१६||

முதி^{3}தாய முக்^{3}த^{4}ஶஶினாவதம்'ஸினே ப^{4}ஸிதாவலேப ரமணீயமூர்த்தயே |
ஜக^{3}தி^{3}ந்த்^{3}ரஜால ரசனா படீயஸே மஹஸே நமோ(அ)ஸ்து வடமூல வாஸினே ||**16**||

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

मुदिताय {முதி³தாய} = மகிழ்ச்சி உடையவராயும்; मुग्धशशिनावतंसिने

{முக்³த⁴ஶஶினாவதம்’ஸினே} = அழகிய சந்திரனை அணிகலமாகக் கொண்டவராயும்; भसितावलेप {ப⁴ஸிதாவலேப} = விபூதியைப் பூசிக் கொண்டிருப்பதால்; रमणीयमूर्तये {ரமணீயமூர்தயே} = மனதைக்கவரும் தோற்றத்தை உடையவராயும்; जगदिन्द्रजाल {ஜக³தி³ந்த்³ரஜால} = இவ்வுலகமெனும் மாயையை; रचनापटीयसे {ரசனாபடீயஸே} = உண்டு பண்ணுவதில் ஸாமர்த்தியமுடையவராயும்; वटमूलवासिने {வடமூலவாஸினே} = ஆலமரத்தடியில் அமர்ந்திருப்பவராயும்; महसे {மஹஸே} = ஜ்யோதி ஸ்வரூபியாயும் உள்ள தக்ஷிணாமூர்த்திக்கு; नमः {நம:} = வணக்கம்; अस्तु {அஸ்து} = இருக்கட்டும்.

தக்ஷிணாமூர்த்தி எப்பொழுதும் ஆனந்தத்துடன் விளங்குபவர். मुदितवदनं दक्षिणामूर्तिमीडे முதி³தவத³னம்’ த³க்ஷிணாமூர்திமீடே³ என்று மற்றோர் இடத்தில் காணப்படுகிறது. அவர் தனது சடைமுடியில் பிறைச்சந்திரனை அணிகலமாகத் தரித்துக்கொண்டுள்ளார். அவர் தனது உடலை விபூதியினால் அலங்கரித்துக்கொண்டிருக்கிறார். அவர் ஓர் சிறந்த மாயாவி. அவர் தன்னுடைய மாயையினால் இவ்வுலகத்தைப் படைத்திருக்கிறார். அவர் தேஜோமயமானவர். அவர் தன்னை அண்டும் பக்தர்களுக்கு ஆன்மஅறிவை அளிக்கும் பொருட்டு




ஆலமரத்தடியில் அமர்ந்திருக்கின்றார். அவ்வாறு விளங்கும் தக்ஷிணாமூர்த்திக்கு வணக்கம் செலுத்த நாம் கடமைப்பட்டுள்ளோம்.

இங்கு இவ்வுலகு ஓர் மாயாமயமான படைப்பு என்று கூறப்பட்டுள்ளது. இது ब्रह्म सत्यं जगन्मिथ्या ப்³ரஹ்ம ஸத்யம்' ஜக³ன்மித்²யா என்ற தத்துவத்தைக் காட்டுகின்றது. பரப்ரம்மம் ஒன்றுதான் உண்மை பொருள். இவ்வுலகம் நம் கண்முன் இருப்பதுபோல் தோன்றினும் உண்மையில் இதற்கு அஸ்தித்வம் என்பது கிடையாது. அதாவது இது ஓர் ஜாலம்-சொப்படி வித்யை சொப்படி வித்தைக்காரன் தன்னுடைய சாமர்த்யத்தால் பல பொருள்களை நம் கண்முன் கொண்டுவந்து காட்டுகிறான். ஆனால் அவைகள் உடனேயே மறைந்துவிடுகின்றன. அவைகள் உண்மைப்பொருள்கள் அல்ல. அது போலவே தக்ஷிணாமூர்த்தியும் மிகுந்த சாமர்த்யம் வாய்ந்த ஓர் ஜாலவித்தைக்காரன் தனது மாயா சக்தியினால் இவ்வுலகத்தைப்படைத்து விடுகின்றான். ஆனால் இது அனைத்தும் மித்யை, நிலையற்றவை. உண்மைப்பொருள் ஒன்றுதான். அதையறிந்தால்தான் நாம் இந்த உலகப்பற்றையறுத்து மோக்ஷத்தையடையலாமென்று போதிப்பதற்காக ஆலமரத்தடியில் அவர் அமர்ந்திருக்கிறார். (16)

व्यालम्बिनीभिः परितो जटाभिः कलावशेषेण कलाधरेण |
पश्यल्ललाटेन मुखेन्दुना च प्रकाशसे चेतसि निर्मलानाम् ||१७||
வ்யாலம்பி³னீபி⁴: பரிதோ ஜடாபி⁴: கலாவஶேஷேண கலாத⁴ரேண |
பஶ்யல்லலாடேன முகே²ந்து³னா ச ப்ரகாஶஸே சேதஸி நிர்மலானாம் ||17||

परितः {பரித:} = சுற்றிலும்; व्यालम्बिनीभिः {வ்யாலம்பி³னீபி⁴:} = தொங்குகின்ற; जटाभिः {ஜடாபி⁴:} = சடைகளோடும்; कलावशेषेण {கலாவஶேஷேண} = ஓர் பிறையினால் மட்டும் எஞ்சியுள்ள; कलाधरेण {கலாத⁴ரேண} = சந்திரனோடும்; पश्यल्ललाटेन {பஶ்யல்லலாடேன} = நெற்றிக்கண்ணுடன் கூடிய; मुखेन्दुना च {முகே²ந்து³னா ச} = சந்திரன் போன்ற முகத்துடனும்; निर्मलानां {நிர்மலானாம்'} = மாசற்றவர்களுடைய; चेतसि {சேதஸி} = மனதில்; प्रकाशसे {ப்ரகாஶஸே} = விளங்குகின்றீர்.

தக்ஷிணாமூர்த்தி தன்னை த்யானம் செய்கின்றவர்களுடைய மனதில் தோற்றமளிக்கின்றார். அவர்கள் தங்களுடைய புண்யகர்மாக்களால் மனதிலுள்ள காமம் முதலான எல்லா அழுக்குகளையும் அகற்றித் தங்களுடைய மனதைப்பரிசுத்தமாக வைத்திருக்கிறார்கள். ஆதலால் அவர்களுடைய மனது ஓர் மாசற்ற கண்ணாடி போல் ஆகி விடுகின்றது. அப்பொழுது தக்ஷிணாமூர்த்தியின் ஸ்வரூபம் அவர்களது மனதில் பிரதிபலிக்கின்றது. அதுசமயம் அவர் சடைமுடி தரித்தவராயும், பிறைச்சந்திரனைத் தனது தலையில் தாங்கியவராயும் நெற்றிக்கண்ணைக் கொண்டவராயும், மதிவதன முடையவராயும் காட்சியளிக்கிறார். (17)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

उपासकानां त्वमुमासहायः पूर्णेन्दुभावं प्रकटीकरोषि |
यदद्य ते दर्शनमात्रतो मे द्रवत्यहो मानसचन्द्रकान्तः ||१८||
உபாஸகானாம்’ த்வமுமாஸஹாய: பூர்ணேந்து³பா⁴வம்’ ப்ரகடீகரோஷி |
யத³த்³ய தே த³ர்ஶன மாத்ரதோ மே த்³ரவத்யஹோ மானஸ சந்த்³ரகாந்த: ||18||

त्वं {த்வம்’} = நீர்; उपासकानां {உபாஸகானாம்’} = தன்னை உபாஸிக்கின்றவர்களுக்கு; उमासहाय: {உமாஸஹாய:} = பரமேச்வரியுடன் கூடியவராய்; पूर्णेन्दुभावं {பூர்ணேந்து³ பா⁴வம்’} = பூர்ணமான சந்திரனுடைய தன்மையை; प्रकटीकरोषि {ப்ரகடீகரோஷி} = வெளிப்படுத்துகின்றீர்; यद् {யத்³} = எதனால்; अद्य {அத்³ய} = இன்று; ते दर्शनमात्रत: {தே த³ர்ஶனமாத்ரத:} = உம்மைக்கண்ட மாத்திரத்திலேயே; मे {மே} = என்னுடைய; मानसवन्द्रकान्त: {மானஸவந்த்³ரகாந்த:} = மனமாகிய சந்திரகாந்தக்கல்; द्रवति {த்³ரவதி} = உருகுகிறது; अहो {அஹோ} = ஆச்சர்யம்!

இந்த சுலோகத்தில் பகவத்பாதர் ஸ்வானுபவத்தை வர்ணிக்கின்றார். தன்னை உபாஸிக்கின்றவர்களுடைய அகக்கண் முன் பரமேச்வரன் அம்பிகையுடன் கூடியவராய்க் காட்சியளிக்கின்றார். அவர் பூர்ணசந்திரனைப் போன்றவர். பார்ப்பவர்களின் மனதைக் கொள்ளை கொள்ளும் தன்மை வாய்ந்தவர். அவரைக் கண்ட மாத்திரத்தில் பகவத்பாதர் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறார். அதை அவர் ஓர் உருவகத்தின் மூலமாக எடுத்துக் காட்டுகின்றார். அவருடைய மனது தான் சந்திரகாந்தக்கல். பரமேச்வரனுடைய தோற்றமே சந்திரபிம்பம். ஆதலால் சந்திரபிம்பத்தைக்கண்டு சந்திர காந்தக்கல் உருகுவது போல் பரமேச்வரனுடைய ஸ்வரூபத்தைக்கண்டு ஆசார்யபாதரின் உள்ளமும் உருகி விடுகிறது. (18)

यस्ते प्रसन्नामनुसंदधानो मूर्तिं मुदा मुग्धशशाङ्कमौलेः |
ऐश्वर्यमायुर्लभते च विद्यामन्ते च वेदान्तमहारहस्यम् ||१९||
யஸ்தே ப்ரஸந்நாமனுஸந்த³தா⁴னோ மூர்த்திம்’ முதா³ முக்³த⁴ ஶஶாங்க மௌலே: |
ஐஶ்வர்யமாயுர் லப⁴தே ச வித்³யாம் அந்தே ச வேதா³ந்த மஹாரஹஸ்யம் ||19||

य: {ய:} = எவன் ஒருவன்; मुग्धशशाङ्कमौले: {முக்³த⁴ஶஶாங்கமௌலே:} = அழகிய மதியை முடியில் தரித்திருக்கும்; ते {தே} = உம்முடைய; प्रसन्नां {ப்ரஸன்னாம்’} = மகிழ்ச்சியுடைய; मूर्तिं {மூர்திம்’} = உருவத்தை; मुदा {முதா³} = சந்தோஷத்துடன்கூட; अनुसंदधान: {அனுஸந்த³தா⁴ன:} = த்யானம் செய்துகொண்டிருக்கிறானோ; स: {ஸ:} = அவன்; ऐश्वर्यं {ஐஶ்வர்யே} = செல்வத்தையும்; आयु: {ஆயு:} = நீண்ட ஆயுளையும்; विद्यां {வித்³யாம்’} = கல்வியையும்; अन्ते {அந்தே} = கடைசியில்; वेदान्तमहारहस्यं च {வேதா³ந்தமஹாரஹஸ்யம்’ ச} = வேதாந்தத்தின் சிறந்த ரஹஸ்யத்தையும்; लभते {லப⁴தே} = பெறுகிறான்.

பரமேச்வரன் தன் ஜடையில் அழகிய சந்திரகலையை அணிந்து கொண்டிருக்கிறான். அவன் ஆனந்தமயமாகக் காணப்படுகின்றான். இவ்வாறு நித்யானந்தரூபியாகத் தோன்றும் பரமேச்வரனை எவன் ஒருவன் அனவரதமும் அனுஸந்தானம் செய்கின்றானோ, அவன் சகலவிதமான நன்மைகளையும் அடைகிறான். அவன் அளவற்ற செல்வத்தையும், நீண்ட ஆயுளையும், சிறந்த

அறிவையும் பெறுகின்றான். கடைசியாக மோக்ஷ சாம்ராஜ்யத்தை அளிக்கவல்ல வேதாந்த ரஹஸ்யங்களையும் அறிந்து கொள்கிறான். ஆனந்தமயமான ஸ்வரூபத்தை தியானம் செய்தலால் இவனும் ஆனந்தரூபியாகவே ஆகிவிடுகின்றான்.

इति श्रीदक्षिणामूर्तिस्तोत्रं संपूर्णम् ॥

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம் முற்றிற்று.

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

For free Copies please mail us. Our Mail ID : Info@voiceofjagadguru.com

Our Website link : https://voiceofjagadguru.com/voj/

Telegram Channel : https://t.me/voiceofjagadguru

Instagram Channel :

https://www.instagram.com/stories/voice_of_jagadguru_voj/3601249542534134684?igsh=MW90YW13N2c5b2hqaA==

WhatsApp Community Channel: https://chat.whatsapp.com/Ly4wlaTu8Kc3sjjEYU8KGu

YouTube Channel : https://youtube.com/@jagad-guru-channel?si=brkLFqiz8sZJ6UIl

Facebook link : https://www.facebook.com/share/1Du5xkve4e/

ஜகத்குரு சங்கராசார்யர் ஶ்ரீ ஶ்ரீ ஶ்ரீ மஹாஸந்நிதானம் ஶ்ரீ ஶ்ரீ ஶ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஶ்ரீ ஶ்ரீ ஶ்ரீ ஸந்நிதானம் ஶ்ரீ ஶ்ரீ ஶ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்